டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 03.01.2025 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 163 - Madurai | Online Edition

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

# பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டில் இந்தியா அறிக்கையை சமர்ப்பித்தது

புது தில்லி, ஜன.2

பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டில் (UNFCCC) இந்தியா தனது 4வது ஈராண்டு புதுப்பிக்கப்பட்ட அறிக்கையை 30.12.2024 அன்று சமர்ப்பித்தது. இந்த 4 ஆவது அறிக்கையில் மூன்றாவது தேசிய தொடர்பியல் புதுப்பிக்கப்பட்டதுடன் 2020 -ம் ஆண்டிற்கான தேசிய பசுமைக்குடில் வாயு இலக்குகளில் அண்மைத் தகவல்கள் சேர்க்கப்பட்டும் உள்ளன.



இந்தியாவின் தேசிய சூழ்நிலைகள், தணிவிப்பு நடவடிக்கைகள், தடைகள், இடைவெளிகள், தொடர்புடைய நிதி, தொழில்நுட்பம் மற்றும் திறன் வளர்ப்புக்கான தேவைகள் பற்றிய தகவல்களையும் இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளது.

மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுதல் அமைச்சர் பூபேந்தர் யாதவ் சமூக ஊடகங்களில் வெளியிட்டு உள்ள பதிவில், நீடித்த வளர்ச்சியில் இந்தியா முன் உதாரணமாக முன்னணியில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். பொருளாதார முன்னேற்றத்தை அர்த்தமுள்ள பருவநிலை நடவடிக்கைகளுடன் இணைப்பதில் பிரதமர் நரேந்திர மோடியின் உறுதிப்பாட்டை இது பிரதிபலிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

2020-ம் ஆண்டில், இந்தியாவின் மொத்த பசுமைக்குடில் வாயு உமிழ்வு 2019-உடன் ஒப்பிடும்போது 7.93 சதவீதம் குறைந்துள்ளது. நிலப் பயன்பாடு, நில பயன்பாட்டு மாற்றம் மற்றும் வனவியல் தவிர்த்து, பசுமைக் குடில் வாயு உமிழ்வுகள் 2,959 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு சமானம் ஆகும். நிலப் பயன்பாடு, வனவியல் சேர்க்கப்பட்ட நிலையில் உமிழ்வு 2,437 மில்லியன் டன் ஆகும். ஒட்டுமொத்த உமிழ்வில் அதிகபட்சமானதாக எரிசக்தியும் (75.66 சதவீதம்) அதை அடுத்து விவசாயம் (13.72 சதவீதம்), தொழில்துறை செயல்முறைகள் மற்றும் உற்பத்தி பயன்பாடு (8.06 சதவீதம்), கழிவு (2.56 சதவீதம்) என உள்ளன. 2020 ஆம் ஆண்டில், இந்தியாவின் காடு மற்றும் மரங்களின் அடர்த்தி, பிற நிலப் பயன்பாட்டுடன், சுமார் 522 மில்லியன் டன் கரியமில வாயு கிரகிக்கப்பட்டது. இது 2020-ம் ஆண்டில் நாட்டின் மொத்த கார்பன் டை ஆக்சைடு உமிழ்வில் 22% குறைக்கப்பட்டதற்கு சமமாகும்.

வரலாற்று காலத் தொடர்ச்சியில் உமிழ்வு மற்றும் தற்போதைய உலகளாவிய உமிழ்வு அளவுகளில் இந்தியாவின் பங்களிப்பு மிகக் குறைவாக இருந்தபோதிலும், நீடித்த வளர்ச்சியின் பின்னணியில் பருவநிலை மாறுதலை எதிர்த்துப் போராட இந்தியா ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.2

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மாதத்திற்கான பயிற்சி 6.01.2025 திங்கட்கிழமை அன்று அளிக்கப்படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்




பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியானது காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422-6611214, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



Rithvik Pipe®
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# திருவள்ளூர் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு இணை இயக்குநர் ஆய்வு

திருவள்ளூர், ஜன.2

திருவள்ளூர் விதைப்பரிசோதனை நிலையத்தில் சென்னை, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு இணை இயக்குநர் தபேந்திரன் 31.12.2024 அன்று ஆய்வு மேற் கொண்டார்.

அப்போது சான்று விதை மாதிரி, ஆய்வாளர் விதை மாதிரி மற்றும் பணி விதை மாதிரி ஆகியவற்றின் ஈரப்பதம், இனத் தூய்மை, பிற தானிய விதை, தூய விதை ஆகியவற்றின் பதிவுகள் அடங்கிய பதிவேடுகளை ஆய்வு செய்தார். மேலும், திருவள்ளூர் விதைப்பரிசோதனை நிலையத்தில் டிசம்பர் 2024 முடிய இலக்கில் சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள், பணி விதை மாதிரிகள் சாதனை விவரங்கள் முடிக்கப்பட்டுள்ளதா எனவும், மேலும் ஆண்டு இலக்கை முழுமையாக முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் NADP திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து இயந்திரங்களும் சரியான முறையில் செயல்படுகிறதா எனவும் அதன் செயல் விளக்கத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முளைப்பு திறன் அறையில் தட்பவெப்பநிலை மற்றும் வெளிச்சத்தின் அளவு சரியாக பராமரிக்கப்படுகிறதா எனவும். விதை மாதிரிகள் நிர்ணயிக்கப்பட்ட வழிமுறைகளை கையாண்டு பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறதா எனவும் ஆய்வு செய்யப்பட்டது. விதைகள் சேமிக்கும் அறையில் சரியான வழிமுறைகள் கையாளப்படுகிறதா எனவும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது பெ.ராஜகிரி, விதைப்பரிசோதனை அலுவலர், எஸ்.ஶ்ரீதேவி, விதைச்சான்றளிப்பு உதவி இயக்குநர், வே.சுகுணா, மூத்த வேளாண்மை அலுவலர் மற்றும் விதைச் சான்று அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 02.01.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 38 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 55 | 57A | உருளை(ஊட்டி) | 36 | 46 |
| 2 | வெண்டை | 40 | 48 | 58 | மேரக்காய் | 22 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 15 | 18 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 34 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 14 | 17 | 60 | கேரட் | 45 | 48 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 66 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 65 |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 30 | 35 |
| 7 | பீர்க்கன் | 45 | 50 | 63 | டர்னிப் | 30 | 35 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 22 | 26 |
| 9 | பாகற்காய் | 35 | 40 | 65 | மு.கோஸ்(கலர்) | | |
| 10 | கொத்தவரை | 40 | 44 | 66 | காளிபிளவர் | 44 | 48 |
| 11 | பூசணி | 14 | 16 | 67 | பட்டாணி | 85 | 95 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 288 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 45 | 69 | இஞ்சி | 46 | 90 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 50 | 56 | 70 | புருக்கோலின் | 120 | 130 |
| 15 | சி.வெங்காயம் | 68 | 72 | 71 | பென்னி பீன்ஸ் | 70 | 75 |
| 16 | பெ.வெங்காயம் | 37 | 40 | 72 | குடமிளகாய் | 60 | 65 |
| 17 | த பயறு(வெள்ளை) | 40 | 45 | 73 | ஊட்டி அவரை | 100 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 110 | 130 | 71A | | | |
| 20 | தேங்காய் | 55 | 60 | | | | |
| 21 | மாங்காய் | 80 | 90 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 42 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 60 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 30 | 34 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 74 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி&பாலாக்கு | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 40 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 58 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 25 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 65 | 70 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 40 | 46 | 97 | செவ்வாழை | 70 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 78 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 32 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 34 | | | | |
| 55A | துவரை | 55 | 60 | | | | |

# இயற்கை வேளாண்மை மற்றும் இடுபொருட்கள் தயாரிப்பு பற்றி பயிற்சியளிக்கப்பட்டது



திருச்சி, ஜன.2

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் மூலம் செயல்படும் அட்மா திட்டத்தின் கீழ் துவாக்குடி கிராம விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மிகச் சன்னரக நெல் சாகுபடி பண்ணைப்பள்ளி வகுப்பில் இயற்கை வேளாண்மை மற்றும் இடுபொருட்கள் தயாரிப்பு பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது.






இதில் வேளாண்மை உதவி இயக்குனர் சுகன்யா தேவி தலைமை வகித்து துறை சார்ந்த திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். அங்கக வேளாண்மையில் முன்னோடி விவசாயியாக செயல்படும் முத்துக்குமார் பஞ்சகாவியா, மீன் அமிலம், புண்ணாக்கு கரைசல், கன ஜீவாமிர்தம், மூலிகை பூச்சி விரட்டி பஞ்சகாவியா விளக்கு, போன்ற இயற்கை இடுபொருள்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடுகள் பற்றி எடுத்துக் கூறி, தேமோர் கரைசல், முட்டை கரைசல், பூச்சி விரட்டி செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் கருணைநாயகி நெல் நுண்ணூட்டத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக் கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபாதேவி வரவேற்புரையாற்றி அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக் கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழிநுட்ப மேலாளர்கள் சரஸ்வதி மற்றும் நீலகண்டன் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# 'காளான் வளர்ப்பு' தொழில் தொடங்க ஆர்வம் உள்ள பட்டியலின நபர்களுக்கு 5 நாட்கள் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி

நாமக்கல், ஜன.2

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வருகின்ற 20 முதல் 24.01.2025 வரை ஐந்து நாட்கள் சிறப்பு பயிற்சியாக காளான் வளர்ப்பு தொழில் தொடங்க உள்ள பட்டியலின நபர்களுக்கு 5 நாட்கள் காளான் வளர்ப்பு இலவச பயிற்சி தேசிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் இலாபம் தரும் காளான் வளர்ப்பு முறைகள், விதை உற்பத்தி காளானின் வகைகள், காளான் வளர்க்கப்படும் போது ஏற்படும் இடர்பாடுகளும் தீர்வுகளும், காளானில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் விற்பனை முறைகள் பற்றி தெளிவாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது. காளான் வளர்ப்பு பற்றிய தொழில்நுட்பங்கள் விரிவாக எடுத்துரைக்கப்படும்.

மேலும் காளான் வளர்ப்பு உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு அழைத்து செல்லப்பட்டு தொழில்நுட்பங்கள் வழங்கப்படும். மேலும் பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு பயிற்சி சான்றிதழ்களும், பயிற்சி கையேடும் மற்றும் பயணப்படியும் வழங்கப்படும்.

இப்பயிற்சியில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பட்டியலின் விவசாயிகள் பட்டியலின பண்ணை மகளிர்கள், பட்டியலின் விவசாய ஊரக இளைஞர்கள், படித்து முடித்து வேலையில்லாத பட்டியலின மாணவ, மாணவிகள், விவசாயம் சார்ந்த களப் பணியாளர்கள், பண்ணையாளர்கள் ஊரக மகளிர், தொழில் தொடங்குபவர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

ஆகையால் இப்பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள பட்டியலினத்தவர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம். தொடர்புக்கு : 04286 - 266345, 266650, 99430 08802, 95974 6373 மற்றும் 70105 80683 என்ற கைபேசி எண்களை அணுகவும்.

இப்பயிற்சியில் நாமக்கல் மாவட்ட பட்டியலினத்தவர்கள் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். முதலில் வரும் 40 நபர்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படும்.

ஆகையால் உடனே மேற்கண்ட கைபேசி எண்களை தொடர்பு கொண்டோ அல்லது நேரில் அணுகியோ 17.01.2025ம் தேதிக்குள் முன்பதிவு செய்துக் கொள்ள வேண்டும். மேலும் பயிற்சிக்கு வரும் பட்டியலினத்தவர்கள் தங்களுடைய ஆதார் அட்டை மற்றும் சாதிச் சான்றிதழ் கண்டிப்பாக கொண்டு வர வேண்டும்.

இதனை, நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் க.வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.2

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம் மாதத்திற்கான பயிற்சி 6.01.2025 திங்கட்கிழமை அன்று அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ளவிழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) (வரி கட்டணம் உட்பட) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியானது காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422-6611336, 0422-6611226 மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# கொம்மேபள்ளி ஊராட்சியில் ராபி பருவம் குறித்த விவசாயிகள் பயிற்சி



கிருஷ்ணகிரி, ஜன.2

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம், வேளாண்மை துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் (அட்மா) 2024-25ம் ஆண்டிற்கான கொம்மே பள்ளி ஊராட்சியில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ராபி பருவ கிராம வேளாண் முன்னேற்ற குழு குறித்த பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர் செல்வம் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் ஊராட்சி மன்ற




தலைவர் தேவராஜ், அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன், கால்நடை மருத்துவர் கோகிலவாணி, பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் கல்யாணசுந்தரம், உதவி தோட்டக்கலை அலுவலர் புத்தன், உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் கூறியதாவது, கிராம முன்னேற்ற குழுவின் நோக்கம் செயல்படும் விதம், திட்டங்கள் மற்றும் மானியங்கள் மக்களிடையே சேர்த்தல், சிறுதானி யங்கள் மற்றும் பயறு வகைகளின் பயன்கள் அதனால் நமக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும், விவசாயிகள் சிறுதானியம் மற்றும் பயறு வகைகளை பயிரிட்டு மானியங்களை பெற்று கொள்ளலாம் என்று கூறினார். இதற்குண்டான விதைகள் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும் என்றும் விவசாயிகள் விதைப்பண்ணைகள் அமைத்து கூடுதல் இலாபம் அடையலாம் என்றும் கூறினார்.

கிராம வேளாண் முன்னேற்ற குழு சிறப்பாக செயல்பட்டு இயற்கை பண்ணையம் அமைத்து நோயற்ற வாழ்வும் இரட்டிப்பு இலாபம் அடையலாம். மேலும் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதன் மூலம் குறைந்த செலவில் இரட்டிப்பு இலாபம் அடையலாம் என்று கூறினார். இதற்கு கிராம வேளாண் முன்னேற்ற குழுவானது சிறப்பாக செயல்பட்டு மற்ற விவசாயிகளுக்கு முன்னோடிகளாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன், கோடை உழவு செய்வதன் அவசியம் அதனால் ஏற்படும் பயன்கள் மண் மாதிரியின் பயன்கள் மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கும் முறைகள் குறித்த செயல் விளக்கம் செய்து காண்பித்தார். கால்நடை மருத்துவர் கோகிலவாணி, பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் கல்யாணசுந்தரம் ஆகியோர் தம் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார்கள்.

உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்வேந்தன் நடப்பாண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பேட்டரி தெளிப்பான், ஜிப்சம், ஜிங்க் சல்பேட் மற்றும் தானியங்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படும் என்று கூறினார். உதவி தோட்டக்கலை அலுவலர் புத்தன் தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள் இலவச மாக வழங்கப்படும் நாற்றுகள், மல்ச்சிங் ஷீட், நீர் சேமிப்பு தொட்டி, 5 வகையான பழ செடி தொகுப்பு மானிய விலையில் கிடைக்கும் என்று கூறினார்.

ஊராட்சி மன்ற தலைவர் தேவராஜ், நம் கொம்மேபள்ளி ஊராட்சிக்கு அரசு வழங்கிய கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மானியங்கள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகள் வாங்கி பயன் அடைய வேண்டும் என்று கூறினார். இறுதியாக இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப் பட்டது. இப்பயிற்சியில் சொட்டு நீர் பாசன நிறுவனத்தார் கலந்து கொண்டனர். மேலும் பாரம்பரிய நெல் இரகங்கள் மற்றும் சிறு தானியங்கள் கண்காட்சி இடம் பெற்றிருந்தது.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கா.ம.முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச்சாமி ஆகியோர் சொட்டு நீர் பாசனத்தின் பயன்கள் அரசு வழங்கும் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார். உழவன் செயலியின் பயன்கள் மற்றும் உழவன் செயலி விவசாயிகளுக்கு பதிவிறக்கம் செய்தும் உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங் களின் பயன்கள் குறித்தும் விளக்கி கூறினார்கள். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

# பயிர் வளர்ச்சிக்கு உதவும் உயிரியல் கட்டுபாட்டு காரணிகள் (சூடோமோனாஸ், டி.விரிடி) பற்றி தெரியுமா?




பொதுவாக தாவரங்களை தாக்கும் நோய்களை (பாக்டீரியா, பூஞ்சான நோய்கள்) கட்டுப்படுத்த உதவுவதுடன் பயிர் வளர்ச்சிக்கு உதவுக்கூடிய உயிரியல் முறையில் தயாரிக்கப்பட்ட உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் பற்றி இந்த பதிவில் தெளிவாக பார்ப்போம்.

**1) சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ்**

பொதுவாக வேளாண் பயிரை தாக்கும் குலை நோய் (BLAST) தண்டு அழுகல் மற்றும் வேரழுகல் நோய்களை கட்டுப்படுத்தும் எதிர் உயிர் பாக்டீரியா தான் இது. விதை மற்றும் மண் மூலமாக பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதுடன் தாவர பயிரின் வளர்ச்சியை எளிதாக ஊக்குவிக்கும் தன்மை உடையது.

**பயன்படுத்தப்படும் பயிர்கள் & கட்டுப்படுத்தும் நோய்கள்**

1) **நெல் –** குலைநோய், இலைப்புள்ளி, இலை உறை அழுகல் இலைக்கருகல் நோய்.

2) **பயறு வகை பயிர்கள், எண்ணெய வித்து பயிர்கள் –** வாடல் நோய், தண்டு அழுகல், வேர் அழுகல்

3) **காய்கறி பயிர்கள் / பழப்பயிர்கள்** – வாடல் நோய்.

**பயன்படுத்தும் முறை**

1) **விதை நேர்த்தி :** ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்றளவில் கலந்து 24 மணி நேரத்திற்கு பின் விதைக்கவும்.

2) **நிலத்தில் இடுதல் :** ஒரு கிலோ சூடோமோனாஸ்யுடன் 50 கிலோ மக்கிய சாண குப்பைகளில் கலந்து நிலத்தில் இடலாம்.

3) **தெளிப்பு முறை :** ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்றளவில் கலந்து தெளிக்க வேண்டும். (FOLIAR SPRAY).

4) **மாத்திரைக் குப்பிகள் (CAPSULE FORM)**

வாழைக்கன்றில் ஏற்படும் நோய்களுக்கு ஒரு குப்பிக்கு 50 மி.கிராம் அளவில் கலந்து வைக்க வேண்டும்.

டிரைக்கோ டெர்மா விரிடி (T.VIRIDI) இது பூஞ்சானத்தை கட்டுப்படுத்தக்கூடியது (FUNGUS). இந்த பூஞ்சானத்தின் இழைகள் மண்ணில் உள்ள நோய் கிருமிகளுடன் உணவிற்காக போட்டியிட்டு என்சைம் (ENZYMES) மற்றும் நச்சுப் பொருட்களை உற்பத்தி செய்து நோய்கிருமிகளின் எண்ணிக்கை குறைக்கிறது. அது மட்டுமல்லாது விதையை சுற்றி நோய் கிருமிகள் நெருங்காவண்ணம் பாதுகாப்பு வளை–யத்தை உருவாக்கி நோய் கிருமிகள் தாக்காமல் பாதுகாக்கிறது.

**எந்த எந்த பயிருக்கு இது எந்த எந்த நோய் கட்டுப்படுத்த உதவுகிறது?**

பருத்தி, கம்பு, பயறு வகைகள், நிலக்கடலை, எள், சூரிய காந்தி மற்றும் காய்கறி, பழப்பயிர்களில் காணப்படுகின்ற வாடல், தண்டழுகல், வேரழுகல் நோய்களை இந்த டி.விரிடி கட்டுப்படுத்த உதவுகின்றன.

**எப்படி பயன்படுத்துவது?**

விதை நேர்த்தி – ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்றளவில் கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும். தெளிப்பு முறை மற்றும் தொழு உரத்துடன் கலந்து EN RICHARD FARM YARD MANURE) தயாரிக்கவும் பயன் படுத்தப்படுகிறது. பொதுவாக உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை இரசாயன உரங்களுடன் கலக்க க்கூடாது. பிற உயிர் உரங்களுடன் மற்றும் இயற்கை உரங்களுடன் கலந்து பயன்படுத்தலாம். உயிரியல் காரணிகளை வெயிலான இடங்களில் வைக்கக்கூடாது.

இவை இரண்டும் வேளாண்மை விரிவாக்க மையங்களில் முழு விலை / மானிய விலையில் வழங்கப்படுகின்றன. தனியார் உரக்கடைகளிலும் கிடைக்கும். எனவே இத்தகைய சிறப்பான உயிர் நோய் கட்டுப்பாட்டு காரணிகளை பயன்படுத்திடவும். இரசாயனங்களை தவிர்க்கவும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# நெல்லில் நெல்பழ நோய் என்ற கரிபூட்டை நோய் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் அறிவுறுத்தல்



திருச்சி, ஜன.2

திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார பகுதிகளில் சம்பா பட்டத்தில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பெரும்பாலான இடங்களில் நெல் பூக்கும் தருவாயில் உள்ளது. இந்த முன்பட்ட சம்பா நெற்பயிர் களில் சில இடங்களில் நெல் பழம் என்று சொல்லப்படுகிற நெல் கரிபூட்டை நோய் (அ) இலட்சுமி நோய் காணப்படுகிறது. இந்நோய் தாக்கிய நெல்மணிகள் பொருத்து கருமை கலந்த பச்சை அல்லது மஞ்சள் நிறமாக மாறி சிறிய பந்து வடிவில் காணப்படும். இந்நோய் நெற் பயிர் பூக்கும் பருவம் மற்றும் நெல் மணிகள் பால் பிடிக்கும் தருணத்தில் காணப்படும். குறிப்பாக தற்போது நிலவும் மழை மற்றும் மேகமூட்டத்துடன் கூடிய பனிப்பொழிவு உள்ள நிலையில் நோய் பரவல் அதிகமாகும். இந்நோயை வரும் முன்னர் பூஞ் சாணக் கொல்லி தெளித்து கட்டுபடுத்துவதே சிறந்தது ஏனெனில் நோய் தாக்கிய பின்பு நாம் வயலில் இறங்கி பூஞ்சாணக்கொல்லி தெளிப்பு செய்யும் போது சிறிய நெல் பழங்கள் (பந்துகள்) உடைந்து நோய் பரவல் அதிகமாகக்கூடும். குறிப்பாக CO(R)-50, BPT-5204 போன்ற நெல் இரகங்களில் இந்நோயின் தாக்குதல் அதிகமாக இருக்கும்.

இந்நோயை கட்டுப்படுத்த சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் கீழ்க்கண்ட வழிமுறைகளை அறிவுறுத்துகிறது.

இந்நோயிலிருந்து பயிரை காக்க பூக்கும் பருவத்தில் அதிக தழைச்சத்து உரங்கள் இடுவதை தவிர்க்க வேண்டும். இந்நோயை கட்டுப்படுத்த ஏக்கருக்கு புரோபிகோனசோல் 200 மில்லி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் அல்லது காப்பர் ஹைட் ராக்சைட் 77% WP -500 கிராம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு பூஞ்சாணக்கொல்லியை கண்டிப்பாக 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பு செய்ய வேண்டும்.

மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சேவையூர் கலசம் வேளாண்மை சேவை மையம் – ஓர் பார்வை




விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்திலுள்ள சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனம் நபார்டு வங்கி உதவியுடன் கலசம் அக்ரி சேவை மையத்தின் செயல்பாடுகளை வேளாண்மை ஆலோசகர் சந்திரசேகரன் பின்வருமாறு கூறியுள்ளார்.

இந்த கலசம் வேளாண்மை சேவை மையம் சிசிடியின் ஒரு அங்கமாகும். இதனை அதனுடைய செயல் இயக்குநர் பத்மாவதி திட்ட இயக்குநர், ஜான் பிரிட்டோ வழிகாட்டுதலின் பேரில் FPO சி.இ.ஓ பார்த்த சாரதியின் மேற்பார்வையின் பேரில் அனைத்து விதமான உரங்கள் பூச்சி / நோய் மருந்துகள் நுண்ணூட்ட உரங்கள் தேவையான அளவில் இருப்பில் உள்ளதுடன் முழுமையாக செயல்படுத்தபட்டு வருகிறது.

இந்த வேளாண்மை சேவை மையத்தில் விவசாயிகளுக்கு தேவையான இயந்திரங்கள் (விதைப்பான், களை எடுக்கும் இயந்திரங்கள், கடப்பாறை, மண்வெட்டி போன்றவை விற்பனைக்கு தயாராக உள்ளது. அத்துடன் இல்லாமல் விவசாயிகளுக்கு வேளாண்மை சேவை மையம் மூலமாக வாடகைக்கு விடப்படுகிறது. காலநிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் வகையில் வறட்சி தாங்கி வளரும் மரக்கன்றுகள் / பழ மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு உரிய ஆவணங்களின் பேரில் வழங்கப்படுவதாக தெரிவித்தார். இந்த மையம் வாயிலாக இ.சேவை, ஆன்லைன் பட்டா மற்றும் அரசு வழங்கும் மானியத் திட்டங்களும் பதிவு செய்து தரப்படும்.

ஒவ்வொரு புதன்கிழமை தோறும் வேளாண்மை ஆலோ சகரின் வருகையின் போது விவசாயிகளுக்கான பிரச்சனைக் குரிய விபரங்களுக்கு தீர்வு காணப்படுவதுடன் அந்த அந்த பருவத்திற்கேற்ற சாகுபடி தொழில்நுட்பங்களும் இலவசமாக சொல்லி தரப்படும் என்றார்.

இன்றைய கள ஆய்வில் முடுக்கன்குளம், கல்யாணிபுரம், சொக்கனேந்தல் விவசாயிகளின் எள் நிலக்கடலை பயிர்களை பார்வையிட்டு கீழ்க்கண்ட பரிந்துரைகளை வழங்கப்பட்டது.

1) எள் பயிரில் நுண்ணூட்ட சத்து குறைபாடு நீங்க ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனிஸ் சல்பேட் மணலுடன் கலந்து இடவேண்டும்.

2) நிலக்கடலையில் சாறு உறிச்சும் பூச்சிகளில் அசுவிணி (APHIDS) தாக்குதலை கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் 1500 PPM ஒரு லிட்டர் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கக் கூறப்பட்டது.

3) நிலக்கடலையில் இராண்டாம் களைக்கு பின் 40-45வது நாளில் எக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க கூறப்பட்டது.




4) நிலக்கடலையில் அதிகமாக மகசூல் எடுப்பதற்காக ஊட்ட சத்து கரைசல் தெளிக்க கூறப்பட்டது.

5) கோழி எருவை ஊட்டமேற்றிய எருவாக மாற்றிட 50 கிலோவிற்கு 1 கிலோ அசோஸ்பைரில்லம் 1 கிலோ பாஸ்போ பாக்டீரியா கலந்து வைத்திருந்து சாகுபடி தருணத்தில் நிலத்தில் இடுமாறு கூறப்பட்டது.

அக்ரி சேவை அனைத்து அலுவலக நாட்களிலும் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்பட்டு வருகிறது. எனவே, விருதுநகர் மாவட்டம், நரிக்குடி, திருச்சுழி, காரியாபட்டி விவசாயிகள் பயன்படுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொண்டார்.

கள பயணத்திற்கான ஏற்பாடுகளை கள பணியாளர் பரதன் சிறப்பாக செய்திருந்தார். கள ஆய்வின் போது முன்னோடி விவசாயிகள் பாண்டி, சரவணன், சந்திரன், ரவி மற்றும் அழகம்மாள், மாரியம்மாள் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

# விவசாயிகளுக்கு நவீன பயிர் பாதுகாப்பு மொபைல் செயலி தொழில்நுட்பப் பயிற்சி



வேலூர், ஜன.2

உன்னட் பாரத் அபியான் (UBA) திட்டத்தின் வாயிலாக, வேலூர் மாவட்டத்தில் உள்ள பல்லால குப்பம் கிராமத்தில் விவசாயிகளுக்கு, நவீன பயிர் பாதுகாப்பு மொபைல் செயலி தொழில்நுட்ப பயிற்சி 2.01.2025ல் நடைபெற்றது. பயிற்சியில் முன்னணி விவசாய அறிஞர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் பங்கேற்று, தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

பயிர்களை நோய் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் முன்னேற்றமான கருவிகள், சுற்றுச்சூழல் நட்பு வேளாண் முறைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பாலாறு வேளாண்மைக் கல்லூரி சார்பில் InDe Detection என்னும் மொபைல் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மொபைல் செயலி மூலம், விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் பயிர்களுக்கான நோய் மற்றும் பூச்சி தாக்குதல்களை துல்லியமாக கணித்து, அவற்றிற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கலாம். மேலும், உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளின் சரியான அளவைக் கணக்கிடவும், இயற்கை மற்றும் வேதியியல் தடுப்பு முறைகளை பரிந்துரைக்கவும் இந்த செயலி பயன்படுகிறது.

பயிற்சியில், விவசாயிகளுக்கு செயலியை பதிவிறக்கம் செய்வது, தகவல்களை பதிவுசெய்து பயன்படுத்துவது, மற்றும் தினசரி பயிர் பராமரிப்புக்கான அறிவுறுத்தல்களைப் பெறுவது போன்ற செயல்முறைகள் குறித்து ஆந்திராவை சார்ந்த மென்பொருள் நிபுணர் நிஹால் விளக்கம் அளித்தார். பயிற்சியில் பாலாறு வேளாண்மைக் கல்லூரியைச் சார்ந்த பேராசிரியர்கள் முனைவர் க்ஷ.ஹரிபிரசாத், லு.ரவி, முனைவர் கு.விக்னேஷ், முனைவர் லு. நிவேதா, றீ.ா.பிரபு, றீ.கிரண் சந்தோஷ் குமார் மற்றும் ப்ரீத்தி ஆகியோர் பங்கேற்றனர். விவசாயிகள் தங்கள் சந்தேகங்களை நேரடியாக வல்லுநர்களிடம் கேட்டு தீர்வு பெற்றனர்.

முகாமில் கலந்து கொண்ட விவசாயிகள், ‘இச்செயலி எங்கள் அன்றாட விவசாய பணிகளை எளிதாக்கி, செலவுகளை குறைத்து, அதிக மகசூலை பெற உதவும்‘ என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

இத்தகைய தொழில்நுட்ப பயிற்சிகள் தொடர்ந்து நடைபெறுமென அதிகாரிகள் உறுதியளித்தனர். விவசாயிகள் மத்தியில், இந்த மொபைல் செயலி பயிற்சி எதிர்காலத்தில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# தேனீப்பெட்டிக்களை கையாளும் போது செய்யக்கூடாதவை!

தேன் பெட்டிகளில் தேனீ கூட்டங்களில் செயல்திறனை அறிந்து கவனமான முறையில் பராமரிப்பு செய்தால் மட்டுமே அதிகமாக பலன் அடையலாம். இதற்குத் தவறாமல் தேனீப் பெட்டிகளை ஆய்வு செய்தல் இன்றியமையாதது. முக்கியமாக தேனீப் பெட்டியை நன்கு சுத்தம் செய்து வைக்க வேண்டும். இவ்வாறு ஆய்வு செய்யும்பொழுது ராணித் தேனீயின் செயல்பாட்டுத்திறன் தேன் மற்றும் மகரந்தம் இருப்பு நிலை பூச்சிகள் நோய்கள் தாக்குதல் போன்றவற்றை அறிந்து தகுந்த நேரத்தில் தேவையான சில பாதுகாப்பு வேலைகளையும் செய்ய சுலபமாக இருக்கும். பெட்டிகளை ஆய்வு செய்யும்பொழுது மிகவும் கவனமுடன் கையாளுதல் அவசியம். தேனீக்களிடம்




கொட்டு வாங்காமல் பெட்டிகளை ஆய்வு செய்ய சில யுக்தி களைக் கடைபிடிக்க வேண்டும்.

### செய்யக்கூடாதவை

- அதிகக் காற்று, மழை, பனி உள்ள நேரங்களிலும் இரவு நேரங்களிலும் பெட்டியைத் திறக்கக் கூடாது.
- நுழைவு வழியை மறைத்து நிற்கக் கூடாது.
- அடைச்சட்டங்களை எடுக்கும் போதும் அடைகளை மீண்டும் வைக்கும்போதும் தேனீக்கள் நசுங்கிச் சாகவிடக் கூடாது.
- அடைக்கு அருகில் கை விரல்களை விரைவாக நீட்டுதல், கைகளை விரைவாக அசைத்தல் கூடாது.
- தேனீக்கள் கொட்ட வரும் போது கைகளைத் தலையைச் சுற்றி வீசித் தடுத்தல் அடைச் சட்டங்களை வீசி எறிந்துவிட்டு ஓடுதல் கூடாது.

● தேனீக்கள் கருப்பு நிறத்தை ஆபத்தாக கருதுகின்றன. எனவே கருப்பு நிற ஆடைகளை அணிந்து திறக்கக் கூடாது.

● ஆய்வு செய்பவர் வாசனைத் திரவியங்கள், தைலங்கள், சிகை சோப்புக் குழம்புகள் (Shampoo) ஆகியவற்றைப் பயன் படுத்தக் கூடாது.

● ஆய்வு செய்பவரின் உடலிலிருந்து வியர்வை நாற்றம் வெளிப்படக்கூடாது.

● அளவுக்கு அதிகமாகப் புகையைப் பயன்படுத்தக் கூடாது.

● புகையை உருவாக்க செயற்கை இழை கொண்டு உருவாக்கப்பட்ட கிழிந்த துணிகளையோ அல்லது ரப்பர் பொருட்களையோ பயன்படுத்தக் கூடாது.

● மிகக் குறுகிய காலமே புகை தரவல்ல சுள்ளி காய்ந்த இலைச் சருகு அல்லது வைக்கோல் ஆகியவற்றைப் பயன்படுத்தி புகை உருவாக்கக் கூடாது.






● சூடான புகையைப் பயன்படுத்தக் கூடாது.

● உடற்பகுதியில் விட்டுச் செல்லப்பட்ட கொடுக்கை இருவிரல் கொண்டு எடுக்கக் கூடாது. இதனால் நச்சுப்பை நசுக்கப்பட்டு அதிக விசம் உட்செலுத்தப்படும்.

● தேனீப் பெட்டிகளை தேவையில்லாமல் அடிக்கடி திறந்து பார்க்கக் கூடாது.

இதனை கடை பிடித்தால் தேனீக்களிடமிருந்து கொட்டு வாங்காமல் இலகுவாக கையாளலாம் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாகுல் அமீத் தெரிவித்தார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நெல்தரிசில் பயறு வகை சாகுபடி தொழில்நுட்பங்கள்

நெல்தரிசில் பயறுவகை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து சேலம் மாவட்டம், வீரபாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கூறியுள்ளதாவது,

**விதைக்கும் காலம்–ஜனவரி மூன்றாம் வாரம் முதல் பிப்ரவரி இரண்டாம் வாரம் வரை**

| பயறு வகைகள் | ரகங்கள் | விதை அளவு (கிலோ/எக்டர்) |
|---|---|---|
| உளுந்து | ADT-3, ADT-6, 7 KKM-1, VBN-6 | 25 |
| பச்சை பயறு | ADT-3,VBN-6 | 30 |

● பயிர் எண்ணிக்கையை பராமரிப்பதற்கு சரியான ஈரப் பதத்தில் விதைத்தல் மிகவும் அவசியம்.

● விதைகளை நெல் அறுவடைக்கு சுமார் 7 முதல் 10 நாட்களுக்கு முன் சரியான ஈரப்பதத்தில் (மெழுகு பதத்தில்) நிலத்தில் தூவ வேண்டும்.

● உளுந்து மற்றும் பாசிப்பயறு விதைக்கவுள்ள சம்பா மற்றும் தாளடி வயல்களில் நிலத் தயாரிப்பின் போது நடவுக்கு முன்பு நிலத்தை நன்கு சமன்படுத்துதல் அவசியம். நெல் தரிசுப் பயிர்களில் பயிர் எண்ணிக்கையை பராமரிக்க இது மிகவும் உதவுகிறது.

● நெல் அறுவடைக்கு முன்பு பயறு தெளிக்க முடியாமல் போனால் அறுவடை செய்த பிறகு நீர் பாய்ச்சி சரியான ஈரப்பதத்தில் வரிசைக்கு வரிசை 30 செ.மீ இடைவெளியும், ஒரு வரிசையில் செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியும் இருக்குமாறு கைவிதைப்பு மூலம் வயலில் விதைகளை ஊன்றி விடலாம்.

● **களைக்கொல்லி தெளித்தல் :** களைகள் 2–3 இலைப் பருவத்தில் இருக்கும் போது (விதைத்த 15–20–ம் நாள்) இமாசி தாபைர் 10% SL 500 மிலி/எக்டர், குயிசலோ பாப் எத்தில் 10% EC 500 மிலி/எக்டர் என்றளவில் கைத்தெளிப் பானை கொண்டு தெளிக்க வேண்டும்.

● **இலை வழித் தெளிதல் :** என்.ஏ.ஏ 40 மிகி/லி சாலிசிலிக் அமிலம் 100 மிகி/லி பூக்கும் முன் இலைத் தெளிப்பாக அளிக்க வேண்டும் மற்றும் 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை அளிக்க வேண்டும்.

● சாலிலிக் அமிலம் 100 மிகி/லி பூக்கும் முன் இலைத் தெளிப் பாக அளிக்க வேண்டும் மற்றும் 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை அளிக்க வேண்டும்.

● 200 லிட்டர் தண்ணீரில் பயறு ஒன்டரை (5 கிலோ /எக்டர்) கலந்து பூக்கும் பருவத்தில் இலைத் தெளிப்பாக அளிக்க வேண்டும். இதனால் பூ உதிர்வது கட்டுப்பட்டு விளைச்சல் அதிகரிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு தர்மபுரி மாவட்ட விவசாயிகள் பட்டறிவு பயணம்



திருச்சி, ஜன.2

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள்ந டத்தப்பட்டு வருகிறது. மேலும் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டு நவீன தொழில் நுட்பங்களை தெரிந்து பயன் பெறுகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, தர்மபுரி மாவட்டத்தின் அரூர், பென்னாகரம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் மாவட்ட நீர்வழிப்பகுதி மேம்பாட்டு முகமையின் சுனை நீர் வடிப்பகுதி திட்டத்தின் கீழ் நான்கு குழுக்களாக சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டனர். விவசாயிகளுக்கு வேளாண்மை அறிவியல் நிலையத்தில் செயல்பட்டு வரும் மாதிரி செயல் விளக்கத் திடல்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், அலங்காரம் மற்றும் மூலிகைச் செடிகள் நாற்றங்கால், மண்புழு வளர்ப்பு குடில், காளான் குடில், தென்னை நாற்றங்கால், அசோலா வளர்ப்பு, ஒருங் கிணைந்த பண்ணையத் திட்டம் போன்றவற்றைப் பார்வையிட்டனர். இந்த பயணத்தை தர்மபுரி மாவட்ட நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமையின் அலுவலர்கள் சிவசரவணன், முருகன் மற்றும் ஜெயசக்தி ஆகியோர் ஒருங்கிணைத்தனர். வளாண்மை அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் நடத்தப்பட்டு வரும் பயிற்சிகள் குறித்து திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு எடுத்துரைத்தார். இதில் 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கு பெற்று பயனடைந்தனர்.